# தோரணம்
# Thoranam

நன்றே செய்! இன்றே செய்!!

SMS(UK)Today | மாத e – செய்தி ஏடு | Monthly e-Newsletter

ஓலை - 1 | ஆடி 2016 | தோரணம் - 6




## அருள்வாய் சிவனே!

அணுவின் அணுவில் நின்றாடு பவன் நீ!
அண்டம னைத்தையும் ஆட்டுவிப் பவன் நீ!
சிவகாமியுட னுறை தேவாதி தேவனும் நீயே!
காலொன் றைதூக்கி நின்றாடிடும் கூத்தனே!
சாலவே நானும் உன் நர்த்தனம் காணவே!
என்மலம் மூன்றையும் இன்றே எரித்து
உன்கழல் அடியில் என்சிரமொ ன்றிட
அருள்வாய் தில்லை யிலாடும் சிவனே!

-வை.சிவனருட்செல்வர்


ஆசிரியர் - வை.சிவனருட்செல்வர்     வடிவமைப்பு - சோ.நிரஞ்சன்

## ஆலய, சங்க நிகழ்வுகள்

### ஆவணி - புரட்டாதி மாத ( **August—Sept)** 2016



02-08-2016 செவ்வாய் ஆடி அமாவாசை

**Aadi Amavasai**

09-08-2016 செவ்வாய் சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூசை

21-08-2016 ஞாயிறு சங்கம் ஆரம்பித்த நாள் 21-08-1977

**SMS(UK) InagurationDay 21-08-1977**

**04-09-2016** ஆவணி சதுர்த்தி விநாயகர் விரதம்

15-09-2016 வியாழன் நடேசர் அபிசேகம் மாலை

## கலசம்

கலசம் காலாண்டிதழ்(ஆடி-ஆவணி-புரட்டாதி –2016) வெளிவந்துவிட்டது. இந்த இதழை ஆலயங்களிலும் சைவ முன்னேற்றச் சங்கத்திலும பெற்றுக் கொள்ளலாம்.


"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

## சைவ முன்னேற்றச் சங்கம் (UK)

## Saiva Munnetta Sangam (UK)

***"Community Service Through Saiva (Hindu) Concern"***

2 Salisbury Road, Manor Park, London E12 6AB.

Tel / Fax: 020 8514 4732 Fax: 01268 561805

www.saivamunnettasangam.com smsukinfo@gmail.com

Registered Charity No: 292085


### எமது சேவைகள்

அருள்மிகு சிதம்பரேஸ்வர ஆலயம்

கலசம் காலாண்டிதழ்

தோரணம் மாதாந்த மின்னிதழ்

நால்வர் தமிழ்ப் பாடசாலை

நால்வர் மூத்தோர் நிலையம்

நூல்வர் மூத்தோர் நியைம்

யோகா நிலையம்

சைவ சமயப் பரீட்சைகள்

கலை வகுப்புகள்

நால்வர் கோட்டம்

இறுதிக் கிரியைகள்

# சைவ முன்னேற்ற சங்கம்(U.K)

**அன்புடையீர்**

**பெரியபுராணத் தொடர் விரிவுரை**

.

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்
திருநீல கண்டத்துக் குயவனாக்கு அடியேன்
இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்
இளையான்றன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக்கு அடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டர்க்கு அடியேன்
அலலிமென முல்லையந்தார் அமர்நீதிக்கு அடியேன்
ஆருரன்ஆரூரில்அம்மானுக்குஆளே!

– சுந்தரரின திருத்தொண்டர் தொகை 1ம் பாடல்

. .

திருத்தொண்டர் புராணம் எனப்படும் பெருமைமிக்க சிவனடியார்களின் சிறப்பைச் சொல்லும் பெரியபுராணத் தொடர் சொற்பொழிவு மீண்டும் எங்கள் ஆலயத்தில் இடம்பெற சிவபெருமான் திருவருள் கிட்டியுள்ளது. சென்ற ஆண்டுகளில் ஐந்து முறை இடம்பெற்று பெரும் வரவேற்பைப் பெற்ற இந்தப் பக்திமிக்கத் திருப்பணியில் சிவனடியார்களின் பெருமைகளை எடுத்துச் சொல்லியும்,

| | | |
|---|---|---|
| 22-07-2016<br>வெள்ளிக்கிழமை | கண்ணப்பநாயனார்<br>சிவபெருமான் அகப்படுவார் என்ற உண்மையை விளக்கியவர் | Dr..கந்தையா<br>சிவகுமார் |
| 29-07-2016<br>வெள்ளிக்கிழமை | குங்கிலியக்கலய நாயனார்<br>மணமிக்க தூபத்தொண்டரின் தூய மனம் விளக்கும் வரலாறு | திருமதி காந்திமதி சூரியகுமார் |
| 05-08-2016<br>வெள்ளிக்கிழமை | மானக்கஞ்சாற நாயனார்<br>எல்லாச் செல்வங்களும் சிவனடியார்களுக்கே என்றவர் மாண்பு | திருமதி. புவனேஸ்வரி நடராஜா |
| 12-08-2016<br>வெள்ளிக்கிழமை | அரிவாட்டய நாயனார்<br>இறைவனுக்கு திருவமுது செய்வித்த திருத்தொண்டர் பெருமை | திருமதி. திருமகள் பத்மநாதன் |
| 19-08-2016<br>வெள்ளிக்கிழமை | ஆனாய நாயனார்<br>காண்பவை யாவும் சிவமே ஆன நிலையில் வழிபட்ட சிறப்பு | திரு வன்னியசிங்கம் பவகரன் |

அனைவரும் வந்து அடியார் வரலாறு கேட்டு அருள்பெறுக.

மா.இந்துசேகரன்
பொதுச்செயலாளர்

ம.இரவீந்திரதாஸ்
சமயச்செயலாளர்

**பொன்மாலை வேளை**

**28-05-2016**

இலண்டன் சைவ முன்னேற்றச் சங்கத்தினர் இலண்டனில் முதன்முறையாக பொன்மாலை வேளை என்றதொரு பல்சுவை நிகழ்ச்சியொன்றை ஏற்கெனவே அறிவித்தபடி குறித்த திகதியில் - 28-05-2016 அன்று மாலை 4.30 மணியளவில் woodbridge High School இல் நடத்தினார்கள்.. இந்நிகழ்வை சைவ முன்னேற்றச் சங்கத்தின் மூத்தோர் நிலையத்தினர் தமது பொறுப்பில் முழு.நிகழ்ச்சியையும் நடததியது குறிப்பிடத்தக்கது. இறைவணக்கம் முதற்கொண்டு இறுதி நிகழ்ச்சியாகிய பட்டிமன்றம் வரை எதுவித தடங்கலோ தொய்வோ இன்றி நடத்திய பெருமை சைவ முன்னேற்றச் சங்கத்தின் சமூக சேவைச் செயலாளரும் மூத்தோர் நிலையத்தை திறம்பட நிர்வகித்துவருபவருமான திருமதி.புவனேஸ்வரி சபாரட்னம் அவர்களையே சேரும். மண்டபம் நிறைந்த பார்வையாளர்களை இருக்கைகளை விட்டு அசையவிடாமல் ஒரே சீராக நிகழ்ச்சிகளை வழங்கியமை வரவேற்கத்தக்கது. நாடகங்கள், நாட்டியங்கள், நடனங்கள், முள்ளிவாய்க்கால் அஞ்சலி, மயில் நடனம், எல்லாமே மக்களை கட்டிவைதது:விட்டதெனலாம் இந்நிகழ்வில் இலண்டன் நகரில் இயங்கிவரும் மூத்தோர் நிலையங்கள் பல (Elderly Centres) தங்கள் பங்களிப்பை நிகழ்ச்சிகளை வழங்கியதன்மூலம் ஆதரவு தந்திருந்தார்கள்.

300ற்கு மேற்பட்ட பார்வையாளர்கள், அவர்களுக்கு இருந்த இடத்திலேயே மாலைநேரச் சிற்றுண்டி, இராப்போசனம் என்பனவற்றை நேரத்திற்கு வழங்கி சைவ முன்னேற்றச் சங்கத்தின் மூத்தோர் நிலையத்தினர் அசத்தியே விட்டார்கள். புலம்பெயர் நாட்டில் புலம் பெயர்ந்த மூத்தோர்களினால் நடத்தப்பட்ட முதல் பொன்மாலை வேளை மிகப்பெரிய வரவேற்பைப் பெற்றது என்பதை நினைக்கும்போது மனம் பரவசமடைகிறது.

-ஒரு பாரவையாளன்



















பொன்மாலை வேலை நிகழ்ச்சியின் முழு வீடியோ தொகுப்பையும் கீழே உள்ள you tube ஐ அழுத்துவதன் மூலம் பார்த்து ரசிக்கலாம்

Part 1 


Part 2 

Vadamaradchi East English, Maths & Science Project for the students sitting for GCEO/L Dec.2016. Mr.K.Kaneshwaran, Divisional Secretary formally inaugurating the Project at the Uduthurai Maha-vidyalayam in Maruthankerni Division











சாவகச்சேரியில் உள்ள மிருசுவில் கிராமத்தில் அரச உதவிப்பணத்தில் தமது வாழ்வாதாரத்தைக் கொண்டு வாழும் 38 பெண்களுக்கும் 9 ஆண்களுக்கும் இலண்டன் சைவ முன்னேற்றச் சங்கத்தின் சார்பில் திரு.திருமதி சிவனருட்செல்வன் சேலைகளும் சாரங்களும் வழங்குவதைக் காணலாம் படத்தில் மத்தியில் கிராமசேவகர் காணப்படுகிறார்








# குறளறிவோம்

**நிலத்திற்குப் பாரம்**

**ஈட்டம் இவறி இசைவேண்டா ஆடவர்**
**தோற்றம் நிலக்குப் பொறை ~குறள் 1003**

**(ஈட்டிய பொருளை செலவிடாது இறுகப் பிடித்து புகழை விரும்பாதவரின் பிறப்பு இந்த உலகத்திற்கு பாரமாகும்)**

**பயன் இல்லை**

**கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு**
**அடுக்கிய கோடி உண் டாயினும் இல.~ குறள்1005**

**(பிறருக்கு கெபடுப்பதும் தான் அனுபவிப்பதுமாகிய இரண்டுமே இல்லாதவனுக்கு பல கோடி பொருள் இருப்பினும் பயன் இல்லை.)**

**வேறு துன்பம் இல்லை**

**இன்மையின் இன்னாதது யாதுஎனின் இன்மையின்**
**இன்மையே இன்னா தது. குறள்~1041**

**(வறுமையைவிட துன்பம் தருவது யாதென்று ஆராய்ந்தல், வறுமைபோல் துன்பம் தரவது வேறொன்றும் இல்லை.)**

**உழவன் உலகிற்கு ெச்சாணி**

**உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅ து ஆற்றாது**
**எழுவாரை எல்லாம் பொறுத்து குறள் 1032**

**(உழவுத்தொழிலைச் செய்யாமல் பிற தொழில்களின்மேல் செல்கின்றவர்களையெல்லாம் தாங்குதால் உலகத்தவராகிய தேருக்கு அவர்கள் அச்சாணி போன்றவர்களாவர்.)**

The human body is the temple of God. One who kindles the light of awareness within gets true light. The sacred flame of your inner shrine is constantly bright . The experience of unity the fulfilment of human endeavours. The mysteries of life are revealed. (Rig Veda)

# Hinduism

## Scientifically Proven Religion in the Planet

By. Mr. Sothiratnam Niranjan MSET, MinstLM

**Disclaimer**

All rights are those of the original video holders. At the time of publishing this e-newsletter, all the video clips were tested with IOs, Android and Windows devices. I am not taking any responsibilities on any non working video clips in the later days. I have simply made a collection of what I watched and enjoyed and like to share with the scientific knowledge hunters.

| | |
|---|---|
| Tamil History Kumarik Kandam | |
| ETTAAM ARIVU -- LAMURIA | |
| KUMARI kANDAM (HISTORY OF TAMILS)<br>Film from tamilnadu | |
| Kumari Kandam Documentary<br>History Channel | |
| Kumari kandam<br>Jaya TV | |
| Kumari Kandam<br>Tamil | |
| Kumari Kandam<br>Indian Reporters | |

In our next e-newsletter,

Come with the new documantaries

மேலும் சில பொன்மாலை வேளை நிகழ்ச்சியின் போது எடுக்கப்பட்ட படங்கள்




குறிப்பு:- தோரணம் ஆசிரியர் விடுமுறையில் சென்றபடியால் ஆடி மாத தோரணம் இதழ் வெளியிடுவதற்கு தாமதம் ஏற்பட்டமைக்கு வருந்துகிறோம்.

-சைவ முன்னேற்ற சங்கம்